Registered as a Newspaper

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை: ரூ. 1-25

சுடர் 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு சித்திரை மீ 9 உ. புதன்கிழமை ஹிஜ்ரி 1407 ஷஃபா பிறை 22 (22-04-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 124

புதுமையான
22 KT
தங்க நகைகளை
ஓடர் செய்து
பெற்றுக்கொள்ள நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி: 23628

பெண்மைக்குமெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்
தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி: 23628

★ பஸ் நிலையத்தில் மக்கள் திரளும் மாலை வேளையில்

# புறக்கோட்டையில் குண்டு வெடித்து
# 100 பேருக்கு மேல் உடல் சிதறிப் பலி!

## தமிழ்க் குழுக்கள் மறுப்பு

லண்டன், ஏப் 22

கொழும்பு புறக்கோட்டைக் குண்டு வெடிப்பிற்கும் தங்களுக்கும் ஏதும் தொடர்பில்லை என தமிழ் போராளிகள் குழுக்கள் அறிவித்திருக்கின்றன;

பிரெஞ்சு செய்தி ஸ்தாபனம் இதனை நேற்றிரவு அறிவித்தது. (உ)

## இரவிரவாக மீட்புப் பணி
### கொழும்பு, கம்பஹாவில் ஊரடங்கு

கொழும்பு, ஏப்ரல் 22

புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்தில் நேற்று அதிசக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்ததில், நூற்றுக்கும் அதிகமானோர் அந்த இடத்திலேயே, உடல் சிதறிச் சிதைந்த நிலையில் மரணமானார்கள். நூற்றுக்கும் அதிகமானவர்கள் படுகாயமுற்றனர்

அலுவலகங்கள் முடிந்து வீடு செல்வதற்காக ஏராளமான ஊழியர்கள் கூடியிருந்த மாலை வேளையில் குண்டு வெடிப்பு இடம்பெற்றதால் நகரில் நடந்த பெரும் பரிதாபகரமான விபத்தாக அது மாறியது.

குண்டு வெடிப்பை அடுத்து கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது,

அதிர்ச்சி தரும் இக்குண்டு வெடிப்பினால் கொழும்பு நகர மக்கள் கலங்கிப் போய் இருக்கிறார்கள்.

இச் சம்பவம் பற்றி தெரிவிக்கப்படுவதாவது:-

நேற்று மாலை 4-45 மணிக்குப் பின்னர் – 5-00 மணிக்கு சற்று முன்னதாக – கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் மக்கள் கூட்டம் முண்டியடித்துக்கொண்டிருந்த வேளை –

அலுவலகங்கள் முடிந்து வீடுகளுக்குத் திரும்புவதற்காக பஸ், ரயிலைப் பிடிக்கும் நோக்கில் அங்கு சனக்கூட்டம் நெரிசல் பட்டுக்கொண்டிருந்தபோது – கார் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த அதிசக்தி வாய்ந்த குண்டு பெரும் சத்தத்துடன் வெடித்தது

இந்தக் குண்டு வெடிப்பினால் அருகில் இருந்தோர் உடல் சிதறி மரணமானார்கள். பலர் படுகாயமடைந்தனர்.

கட்டடங்களில் தீ

பக்கத்திலிருந்த கட்டடங்கள் எங்கும் தீப்பற்றி சுவாலை கிளம்பியது. ஒரு சில நிமிட நேரத்தில் புறக்கோட்டைப் பகுதி சுடுகாடாகியது. எங்கும் ஓலக் கூக்குரலும், அழுகுரலும், முனகல் சத்தங்களும் கிளம்பின.

புறக்கோட்டை பஸ் நிலையத்துடன் இணைந்து அமைக்கப்பட்டிருந்த மக்கள் வங்கிக் கிளை அலுவலகத்தின் அருகே நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ● படுகொலை சம்பவங்கள் எதிரொலிக்கும்

அடுத்தடுத்து நடைபெற்ற படுகொலைச் சம்பவங்கள் நாளை வியாழன் நடைபெறவுள்ள நாடாளுமன்றக் கூட்டத்தில் எதிரொலிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது

மோசமடைந்து வரும் நாட்டு நிலைமை குறித்து விவாதிக்க கூடுதல் நேரம் ஒதுக்கும்படி இரண்டு எதிர்க்கட்சி எம். பிகள் சபாநாயகரைக் கடித மூலம் கேட்டுள்ளனர்

கலவானை எம் பி திரு. டி. யு குணசேகரா (கம்யூனிஸ்ட்) மஹரகம எம்.பி திரு தினேஷ் குணவர்த்தன (மக்கள் ஐக்கிய முன்னணி) ஆகியோரே சபாநாயகருக்கு கடிதம் எழுதிய எம். பிகளாவர். (இ-எ)

முச்சந்தி முனி



பிரபவ ஆண்டு தொடங்கின உடனேயே பிரேதம் விழுகிற வருஷமாய்த்தான் இருக்கு......! இனியும் என்னென்ன எங்கெங்கோ......?

## அமைச்சரவை இன்று கூடுகிறது

கொழும்பு, ஏப் 22

அடுத்தடுத்து நூற்றுக் கணக்கானோரை பலி கொண்ட வன்செயல்களின் மத்தியில் இன்று புதன்கிழமை அமைச்சரவைக் கூட்டம் நடைபெறுகிறது.

இன்றைய கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-எ)

## திருமலையில் மீண்டும் ஊரடங்கு

கொழும்பு, ஏப் 22

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று ஊரடங்குச் சட்டம் பிற்பகல் 4 மணி தொடக்கம் அமுலுக்கு வந்தது.

இன்று புதன் காலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது

இதனிடையில் அரச ஊழியர்களை இன்று புதன் முதல் வேலைக்குத் திரும்பும்படி திருமலை அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (இ-எ)

## குடாநாட்டில் உள்ளூர் போக்குவரத்து வழமையான நிலையில்

யாழ்ப்பாணம், ஏப் 22

யாழ் – குடாநாட்டில் போக்குவரத்துச் சேவைகள் தற்பொழுது ஓரளவுக்கு வழமைக்குத் திரும்பியுள்ளன

குடாநாட்டில் தற்பொழுது எரிபொருள் ஓரளவு வருவதையடுத்தே போக்குவரத்துகள் வழமைக்குத் திரும்பி வருகின்றன.

எனினும் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் தொடர்ந்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன

நிலைமை வழமைக்குத் திரும்பும் வரை இச் சேவைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படமாட்டாது என போக்குவரத்துச் சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-10)

## ஜே.வி.பி. உறுப்பினர் கைது!

கொழும்பு, ஏப். 22

சிங்கராஜ காட்டில் ஜே.வி.பி இயக்கத்தைச் சேர்ந்த ஒருவரை நேற்றுப் பொலிஸார் கைது செய்தனர்.

இதுவரை தென் இலங்கையில் 17 ஜே.வி.பியினர் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-எ)

## கிழக்குக் கடலில் தீவிர கண்காணிப்பு

கொழும்பு, ஏப். 22

கிழக்குக் கடலில் முப்படையினர் தீவிரக் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் இருந்து திருகோணமலை வடக்கில் உள்ள தமிழ் 'தளங்'களுக்கு கடலூடாக ஆயுதங்களைத் தீவிரவாதிகள் கொண்டு வருகின்றனராம்.

அதைத் தடுப்பதற்கே கடல், கரையோரப் பகுதிகள் மீது தீவிரக் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

## கோட்டை வங்கி தொடர்ந்து ஸ்தம்பிதம்
### ரூ. 1 கோடி பணமும் தேக்கம்

யாழ் கோட்டை வங்கிகள் தபாலகம் என்பன தொடர்ந்தும் ஸ்தம்பித நிலையில் உள்ளன.

யாழ் கோட்டை முகாமில் உள்ள வங்கிக் கிளைகளுக்கு என அனுப்பப்பட்ட ஒரு கோடி ரூபா பணமும் அப்படியே தேங்கிக் கிடக்கின்றது.

வங்கிக் கிளைகள் இயங்காததாலும் புழக்கத்திற்குரிய பணம் தேங்கிக் கிடப்பதாலும் குடாநாட்டில் மேலும் பணப் புழக்கம் பாதிக்கப் படலாம் என அஞ்சப்படுகிறது.

உள்ளூர் தொலைபேசித் தடை நீடிக்கப்பட்டு வருவதன் காரணமாக இராணுவத்தினருடன் வங்கி அதிகாரிகள் தொடர்பு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

இதனால் இராணுவ அதிகாரிகளுக்கு முன்னறிவித்தல் கொடுத்த பின்னர் முகாமிற்குக் கடமைக்குச் செல்லும் வழமையான நடவடிக்கையை வங்கி அதிகாரிகள் மேற்கொள்ள முடியாதிருக்கிறது

இதனிடையே பிரதான வீதி, பாங்ஷல் வீதி ஆகியவற்றினூடாக தொடர்ந்தும் கோட்டை முகாமில் இருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுவதன் காரணமாக முன்னறிவித்தலும் அனுமதியுமின்றி ஊழியர்கள் கடமைக்குச் செல்ல அச்சம் தெரிவிக்கின்றனர் (உ-10)

## குண்டு வெடித்ததையடுத்து
# சடலங்கள் சிதைந்து சிதறிக்கிடந்தன
# கட்டடங்கள் தீப்பிடித்து எரிந்தன

கொழும்பு ஏப். 22

புறக்கோட்டையில் நேற்று மாலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள பல கட்டடங்கள் தீப்பிடித்து எரிந்தன. பல சடலங்கள் சிதைந்த நிலையில் காணப்பட்டன.

இவ்வாறு பி பி சியின் கொழும்புச் செய்தியாளர் திரு. ஜோன் ரெற்றி தெரிவித்தார்

குண்டுவெடித்த வேளையில் பி.பி சியின் கொழும்புச் செய்தியாளர் ஜோன் ரெற்றி அந்தச் சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் தான் இருந்திருக்கிறார்.

அவர் தனது அனுபவத்தை இங்கு விவரிக்கிறார்:

மாலை 5 மணிக்குச் சற்று முன்னர் குண்டு வெடித்தது அப்போது வீடு திரும்புவதற்காக பஸ் நிலையத்தில் மக்கள் ஏராளமாகக் குழுமியிருந்தனர்.

அருகில் இருந்த கடையொன்றில் நான் இருந்தேன்.

அப்போது குண்டு வெடித்த சத்தம் எனக்கு கேட்டது. பெரிய தீச் சுவாலைவாலளாவ எழும்பியதை நான் கண்டேன்.

உடனே சம்பவம் நடந்த இடத்துக்கு நான் ஓடிச்சென்றேன்.

பஸ்களுக்கும் வாகனங்களுக்கும் இடையில் மக்கள் இழுபறிப்பட்டுக் கொண்டிருந்தனர்.

நிலத்தில் பல சடலங்கள் சிதறிக் கிடந்தன. சிதைந்த நிலையில் அச்சடலங்கள் காணப்பட்டன,

ஒருவரில் நெருப்புப் பற்றிக் கொண்டது. அந்த மனிதன் நெருப்பை அணைத்து உயிர் தப்ப முயற்சிப்பதைக் கண்டேன்.

குழந்தையின் சடலம் ஒன்று அருகில் நிலத்தில் கிடந்தது.

பின்னும் ஓட்டோ ரிக்‌ஷாக்கள், கார்கள் சில தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தன.

நெருப்பு இலங்கை வங்கிக் கிளையைக் கொண்ட நவீன கட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் பலர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 22

திருகோணமலையில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையில் தேடுதல் நடத்திய சிப்பாய்கள் நாற்றுக்கும் அதிகமான தமிழ் இளைஞர்களையும் சிங்கள இளைஞர்களையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தினர்.

கடந்த வெள்ளிக்கிழமை ஹபரணைப் பகுதியில் இடம்பெற்ற படுகொலைகளை அடுத்து இத் தேடுதல் நடத்தப்பட்டது. (இ-10)

## கந்தளாய்ப் படுகொலை பேச்சுமூலம் தீர்வு காணும் அவசியத்தை வலியுறுத்துகின்றது
### அமெ. ராஜாங்க அமைச்சு கருத்து

வாஷிங்டன், ஏப் 22

கந்தளாய்ப் படுகொலைச் சம்பவம், இனப்பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு காணவேண்டிய அவசரத்தை உணர்த்துகின்றது.

இப்படி அமெரிக்க ராஜாங்க அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

படுகொலைச் சம்பவம் பற்றிய அமெரிக்காவின் கண்டனத்தையும் கவலையையும் அப்பேச்சாளர் வெளியிட்டார்.

இதனிடையில் அமெரிக்கப் பத்திரிகை ஒன்று "இலங்கை இன்னொரு அயர்லாந்து ஆக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது" என்று கருத்து வெளியிட்டது.

அந்நிலை ஏற்படும் முன்னர் இந்தியா தலையிட்டு பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண உதவ வேண்டும் என்றும் அப்பத்திரிகை மேலும் கோரியுள்ளது. (இ-எ)

## முருங்கன் ரயில் பாதை தகர்க்கப்பட்டது!

கொழும்பு, ஏப் 22

முருங்கன் ரயில் பாதை தகர்க்கப்பட்டது.

இதனால் மன்னார் மாவட்டத்துக்கான உணவுப் பொருள் விநியோகம் தடைப்பட்டுள்ளது என்று வெகுஜன தொடர்பு நிலையம் அறிவித்தது.

தீவிரவாதிகள் தான் ரயில் பாதையைத் தகர்த்தவர் என்றும் வெகுஜன தொடர்பு நிலையம் அறிவித்தது (இ-எ)

## கிராம சேவையாளர் வீட்டில் சிப்பாய்கள்
### அலுவல்கள் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம். ஏப். 22

கிராம சேவையாளர் ஒருவரின் வீட்டில் சிப்பாய்கள் நிலை கொண்டுள்ளதால் அப்பகுதிப் பொதுமக்கள் பெருமளவு பாதிப்படைந்துள்ளனர்.

கிராம சேவையாளரின் பல முக்கிய தஸ்தாவேஜுக்கள் சிப்பாய்கள் நிலைகொண்டுள்ள வீட்டினுள் இருப்பதே இதற்குக் காரணம்.

வயாவிளான் பலா

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஈரோஸ் அறிவிப்பு

## இராணுவ செயற்பாடுகள் மூலம் அமைதி கிட்டாது
### அதனை உணர்த்தவே ஒட்டிசுட்டான் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 22

இராணுவச் செயற்பாடுகள் மூலம் அரசியல் அமைதியைத் தோற்றுவிக்க முடியாது என்பதைக் குறிப்பாக அரசுக்கு உணர்த்தும் முகமாகவே ஒட்டிசுட்டான் பாதுகாப்புப்படை முகாம் மீது திங்கட்கிழமை அதிகாலை தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.

— இப்படி ஈரோஸ் இயக்கம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

அண்மைக் காலங்களில் சிறிலங்கா அரச பெரும்பாலான பிரதே சங்களில் போராளிகளைப் பின்வாங்கச் செய்து விட்டது போலவும், இராணுவரீதியாக வெற்றியீட்டிவிட்டது என்ற கற்பனையில் தேர்தல்கள் நடத்தப்போவதாகவும் அறிவித்து வந்தது தெரிந்ததே.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மையப்பகுதியிலுள்ள ஒட்டிசுட்டானில் அமைந்துள்ள இப்பாதுகாப்புப் படை முகாம் கேந்திர முக்கியத்துவம் பெற்றதாகும்.

இம் முகாமிலிருந்தே காடுகளுக்குள் ஊடுருவும் இராணுவத்தினர் தேடியழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர் என்பதும் குறிப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்
22-04-1987
புதன்கிழமை
சுபநேரம்:-
4-31 முதல் 6-01 வரை
ராகுகாலம்:-
12-01 முதல் 1-31 வரை
இவை பாலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
நவமி பிற்பகல் 2 29 வரை

இளைய கலைமறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

கோபம் என்னும் அமிலம் எறியப்படும் இடத்தைவிட அதை வைத்துக் கொண்டு இருக்கும் கலத்தையே பெரிதும் நாசப்படுத்தி விடும்.

— இளெங்ட்ஸ்


உதயன்

இல, 15, இரண்டாம் குறுக்குத் தெரு தொலைபேசி: 24805

மின்சார நிலைய வீதி, 22078

யாழ்ப்பாணம் 22-04-1987 த.பெ.இல. 83


# கிழக்கில் மட்டும் ஏன் முஸ்லிம் மாகாணசபை?

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஆரம்ப பீடிகை உருவாகி இருக்கும் திட்டம் 1986 டிச. 19 யோசனையாகும். அந்த யோசனையின் ஆரம்பித்து பேச்சுவார்த்தை மூலம் ஒரு சுமுகத் தீர்வுக்கு வரலாம் என்பது இந்தியாவின் நிலை. டிச 19 யோசனையையே தீர்வாக்க முடியுமா என்பது இலங்கையின் நிலை.

இவ்வாறு தெளிவற்ற ஒரு பின்னணியில், டிச. 19 யோசனை குறித்த இந்திய அதிகாரிகளுடன் பேசுவதற்கு கிழக்கிலங்கை எம். பிக்களை அமைச்சர் தேவநாயகம் தலைமையில் அனுப்பப் போகிறார் ஜனாதிபதி. அது மட்டுமா? முஸ்லிம் எம். பிக்கள் தூதுக்குழு ஒன்றும், அரசாங்கம் மூலம் அல்லாமல் தனிப்பட்ட முறையில் இந்தியத் தலைவர்களைச் சந்தித்துப் பேச இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. அந்தக் குழுவில் முஸ்லிம்களின் முது பெருந் தலைவர்கள் எனக் கருதப்படும் டாக்டர் கலீலும், டாக்டர் பதியுதீன் மஹ்மூத்தும் அங்கம் வகிக்கவுள்ளார்கள்.

டிச 19 யோசனை: இப்போதுள்ள கிழக்கு மாகாணத்தில் இருந்து அம்பாறைத் தொகுதியைப் பிரித்து விட்டு மிகுதியான தொகுதிகளைக் கொண்ட மாகாண சபை ஒன்றை உண்டாக்குவதாகும்.

ஆனால் கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கெனத் தனியான மாகாணசபை நிறுவப்படவேண்டும் என்று வலியுறுத்துவதே, இந்தியா செல்லவிருக்கும் தூதுக்குழுக்களின் பிரதான நோக்கமாகும்.

முஸ்லிம்கள் அநேகமாக இலங்கையின் எல்லா மாகாணங்களிலும் வாழ்கிறார்கள். ஆனால் கிழக்கில் தான் அவர்கள் செறிந்த அதிக எண்ணிக்கையில் வாழ்கிறார்கள். எனினும் அவர்கள் பூகோள ரீதியாக தொடர்ச்சியான நிலப்பரப்பில் வாழவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்திலும் சரி, திருகோணமலை மாவட்டத்திலும் சரி முஸ்லிம்களும், தமிழர்களும் பிட்டும் தேங்காய்ப் பூவும் போல வாழ்ந்து வருகிறார்கள்.

கிழக்கைப் பொறுத்த மட்டில் தமிழர்களையும், முஸ்லிம்களையும் மோதவிட்டுக் கொண்டே சிங்களக் குடியேற்றத்தை துரிதமாக்கி கிழக்கை சிங்களப் பிரதேசமாக்கிவிட வேண்டும் என்பது அரசின் சூழ்ச்சித் திட்டம்.

இது புரியாமல் கிழக்கில் முஸ்லிம்களுக்குத் தனிமாகாண சபை வேண்டும் என்று அடம்பிடிக்கிறார்கள் சில முஸ்லிம் தலைவர்கள்.

முஸ்லிம்கள் தமக்குரிய சர்வ உரிமைகளுடனும், தமிழர்களுக்கு சரிநிகர் சமானமாக வாழ வேண்டும். அவர்களது உரிமைகளைப் பறித்தெடுக்கத் தமிழர்களுக்கும் சரி, சிங்களவர்களுக்கும் சரி அதிகாரம் இல்லை. அவர்கள் எவர்களாலும் அடக்கப்படாமல் சுதந்திரமாக வாழ உரித்துடையவர்கள்.

ஆனால் இப்போது கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் சிங்கள அரசினால் அடக்கி ஒடுக்கப் படவில்லையா? திகவாபியில் முஸ்லிம்களின் காணிகள் பலவந்தமாகப் பறிக்கப்பட்ட ஒன்றே அதற்குப் போதிய உதாரணமாகும்.

கிழக்குத் தமிழர்கள் தமது முஸ்லிம் சகோதரர்களிடம் ஏதாவது உரிமைகளை இதுவரை அடாத்தாகப் பறித்தார்களா?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் போது முஸ்லிம் மக்களின் நலன்கள் வழுவற்ற முறையில் பேணப்பட வேண்டும். அவர்கள் தமது அலுவல்களைத் தாமே சுயநிர்ணயம் செய்யவும், நிர்வகிக்கவும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அதனை எவரும் மறுக்க இயலாது.

கிழக்கு முஸ்லிம்களும் தமிழ் பேசும் மக்கள். ஆகையால் அவர்கள் தமிழர்களுடன் பேசித் தமது உரிமைகளை நிரந்தரமாக நிலைநிறுத்த வாய்ப்பு உண்டு.

அப்படியிருக்க, இனப்பிரச்சினைக்குத் தீர்வு தரக்கூடிய முளை ஒன்று துளிர்விடும்போது அதனைக் கருக்கிவிடும் கொடிய நெருப்பான முஸ்லிம் மாகாண சபைக் கோரிக்கை அவசியமா?

தெற்கு மாகாணத்திலும் பேருவளை, அளுத்கம, வெலிகம, அக்மீமன, காலி, ஹக்மனை ஆகிய இடங்களில் முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்கிறார்கள்.

மத்திய மாகாணத்திலும் கண்டி, அக்குரணை, ஹரிஸ்பத்துவ, பண்டாரவளை மற்றும் பல இடங்களில் அவர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்கிறார்கள்.

மேற்கு மாகாணத்தில் புத்தளம், சிலாபம், ஆனமடுவ மற்றும் பல இடங்களில் முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்கிறார்கள்.

கிழக்கில் தனி முஸ்லிம் மாகாண சபை வேண்டும் என நெருப்புக் கொளுத்திக்கொடுக்கும் மந்திரிகள் அந்த மாகாணங்களிலும் முஸ்லிம் மாகாணங்களை உருவாக்கிக் கொடுப்பார்களா?

அதற்கு அவர்கள் உடன்படுவார்களா? கிழக்கில் மட்டும் முஸ்லிம் மாகாண சபை தேவைப்படுவது ஏன்? சிங்களவர்கள் தமக்கு அடாத்துச் செய்யமாட்டார்கள், தமிழர்கள் செய்வார்கள் என்று முஸ்லிம்கள் தாமாக அஞ்சுகிறார்களா? அல்லது அஞ்ச வைக்கப் படுகிறார்களா?

கிழக்கு முஸ்லிம்கள் இவற்றை நன்கு உணரவேண்டும். தங்களையும் தமிழர்களையும் எதிரிகளாக்கி மோதவைக்கும் சதி இது என்று உணர்ந்து கொள்ளுதல் நல்லது.

# பலஸ்தீன விடுதலை இயக்கம் ஐக்கியப்படுத்தப்பட்டுவிட்டது

அல்ஜியர்ஸ், ஏப்ரல் 21

பலஸ்தீன விடுதலை இயக்கம் ஐக்கியப்படுத்தப்பட்டுவிட்டது

இப்படி இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத் அறிவித்தார்.

அல்ஜியர்ஸில் நடந்த பலஸ்தீன விடுதலைச்

## அல்ஜியர்ஸ் மாநாட்டு முடிவில் அரபாத் அறிவிப்பு

சவுன்ஸில் கூட்டத்தின் முடிவில் அரபாத் இதனைத் தெரிவித்தார்.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தில் நிலவி வந்த கருத்து வேறுபாடுகளை நீக்குமுகமாக இம் மாநாடு அல்ஜியர்ஸில் நடத்தப்பட்டது.

சிரியா ஆதரவிலான பலஸ்தீன விடுதலைப் பிரிவுத் தலைவர் டாக்டர் ஹபாஸ் உட்பட எல்லா முக்கிய பிரிவுகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டன.

ஆனால் அபு நிடால் தலைமையிலான குழு கலந்து கொள்ளவில்லை.

இக்கூட்டம் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அரபாத்துக்குக் கிடைத்த அரசியல் ரீதியான வெற்றி என்று கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

பலஸ்தீனப் பிரச்சினை குறித்துத் தீர்வு காண சர்வதேச மாநாடு கூட்டப்படவேண்டும் என்று இக் கூட்டத்தில் பேசிய யாசிர் அரபாத் வேண்டுகோள் விடுத்தார். (இ-எ)

## பாகிஸ்தானுடனான இராணுவ தொடர்புகளை மதிப்பீடு செய்யக் கோரிக்கை

வாஷிங்டன், ஏப். 21

பாகிஸ்தானுடனான இராணுவத் தொடர்புகளை சரியாக மதிப்பீடு செய்யவேண்டும் என்று அமெரிக்காவை இந்திய அரசு கேட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை வாஷிங்டனில் பாதுகாப்பு அமைச்சர் கஸ்பர் வைன்பேர்கரை இந்திய இணை அமைச்சர் நட்வர்சிங் சந்தித்துப் பேசினார்.

அப்போதே மேற்கண்ட வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா நவீன ஆயுதங்களைத் தொடர்ந்து வழங்குகின்றது இதனால் தெற்காசியப் பிராந்தியத்தில் பதற்ற நிலை அதிகரிக்கும்.

இரண்டு நாடுகளும் ஆயுதங்களை வாங்கிக் குவிப்பது அதிகரிக்கும். இதனால் இந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சி தான் பாதிக்கும்.

இதை கருத்தில் கொண்டு பாகிஸ்தானுடனான இராணுவத் தொடர்புகளை அமெரிக்கா மதிப்பீடு செய்ய வேண்டும்—

இப்படி திரு. நட்வர்சிங் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சரிடம் தெரிவித்தார். (இ-எ)

## காலமானார்

வாஷிங்டன். ஏப். 21

அமெரிக்காவின் பிரபல இராணுவ தளபதியாக விளங்கிய ஜெனரல் டெய்லர் தனது 85 ஆவது வயதில் கடந்த செவ்வாய் காலமானார். (இ-எ)

## ரஷ்யரை நாடு கடத்த அமெரிக்கநீதிமன்றம் உத்தரவு

வாஷிங்டன், ஏப். 21

இரண்டாம் உலகமகா யுத்த காலத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் ஒன்றுக்காக ரஷ்ய நீதிமன்றத்தினால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கார் லினஸ் என்ற ரஷ்யரை, ரஷ்யாவுக்கு நாடு கடத்துமபடி அமெரிக்க உயர் நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

லினஸ் கடந்த 36 ஆண்டுகளாக அமெரிக்காவில் வசித்து வருகின்றார்.

அவர் இல்லாமலே ரஷ்ய நீதிமன்றம் விசாரணை நடத்தி மரண தண்டனை வழங்கியது.

ரஷ்ய முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டு இருந்தவர்களில் 25 பேரை சுட்டுக் கொலை செய்ததாக இவர்மீது குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது.

எட்டு ஆண்டுகளுக்கு முன்னர்தான் விசாரணை முடிந்து மரணதண்டனை விதிக்கப்பட்டது. (இ-எ)

### வெளி உலகில்

## கருணாநிதி கைதாகி விடுதலை

சென்னை, ஏப். 21

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி கடந்த செவ்வாய் இரவு கைது செய்யப்பட்டார்.

சில மணித்தியாலங்களின் பின்னர் பொலிஸார் அவரை விடுவித்தனர்.

வெள்ளகோவில் என்னும் இடத்தில் இச் சம்பவம் இடம்பெற்றது.

தடையை மீறி பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுவதற்கு திரு. கருணாநிதி சென்றார். அச்சமயமே அவர் கைது செய்யப்பட்டார்.

வெள்ளகோவிலில் தி. மு. க. பொதுக்கூட்டம் ஒன்றுக்கு ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது.

ஆனால் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் போடப்பட்டிருந்த மேடை இனந்தெரியாதவர்களினால் தீக்கிரையாக்கப்பட்டது.

பின்னர் புதுமேடை அமைத்து மீண்டும் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்த தி. மு. க. தொண்டர்கள் ஏற்பாடு செய்தனர்.

இக்கூட்டத்துக்கே பொலிஸார் தடை செய்தனர்.

இத்தடையை மீறி திரு. கருணாநிதி பேசச் சென்றிருந்த போதே கைதாகி பின்னர் விடுதலையானார். (இ-எ)

## குழந்தை பெறுவதை நிறுத்த மறுக்கும் பெண்!

வாஷிங்டன், ஏப். 21

கடவுள் நிறுத்தும்வரை நான் குழந்தை பெற்றுக்கொண்டே இருப்பேன்.

பதினைந்து குழந்தைகளைப் பெற்றெடுத்த பின்னர் பதினைந்தாவது குழந்தையை வயிற்றில் தாங்கிய வண்ணம் 35 வயதுப் பெண் ஒருத்தி இதைத் தெரிவித்தார்.

சொன்ன இடம், அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டன்.

பெண்ணின் பெயர் ஜாக்குலின் வில்லியம்ஸ்

'வாஷிங்டன் போஸ்ட்'' நாளிதழுக்கு இத்தகவலை அப்பெண் தெரிவித்தார்.

''பெற்றது போதும்; குழந்தை பெறுவதை இனி நிறுத்துங்கள்''— இப்படி நகர மேயர் மேரியன் பாரி இப்பெண்ணுக்கு வேண்டுகோள் விடுத்தார்! இதை அப்பெண்ணுக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணி விட்டது

இந்தப் பெண்ணின் குடும்பம் மாநகர சபை உதவியில்தான் வாழ்கின்றது. இதனால் சபைக்கு மாதம் பத்தாயிரம் டாலர் செலவாகிறதாம்.

''நான் 16 வயதில் இருந்து ஒழுங்காக குழந்தைகளை பிரசவித்து வருகிறேன். குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை நான் கடைப்பிடிக்க விரும்பவில்லை அப்படிச் செய்து உடலைக் கெடுக்க விரும்பவில்லை''— இப்படி 35 வயதில் 15 ஆவது குழந்தையைப் பிரசவிக்கப்போகும் ஜாக்குலின் வில்லியம்ஸ் தெரிவித்தார். (இ-எ)

## ஜெருஸலம் என்றும் இஸ்ரவேலின் தலைநகரே என்கிறார் ஷாமிர்

டெல் அவிவ், ஏப். 21

ஜெருசலம் என்றைக்கும் இஸ்ரவேலின் தலைநகரே அதை விட்டுக் கொடுப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை.

இப்படி இஸ்ரவேல் பிரதமர் ஷாமிர் அறிவித்தார்.

அல்ஜியர்ஸ் மாநாட்டில் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் பேசுகையில் உதேச பலஸ்தீன நாடு. ஜெருசலத்தைத் தலைநகராகக் கொண்டதாகவே இருக்கும் என்று அறிவித்திருந்தார்.

இக் கூற்று இஸ்ரவேல் பிரதமருக்குக் கோபத்தை உண்டாக்கியது.

அவர் இது குறித்த கருத்துத் தெரிவிக்கையிலேயே, ''ஜெருசலம் என்றைக்கும் இஸ்ரவேலுடன்தான் இருக்கும்'' என்று வலியுறுத்தினார். (இ-எ)

# தமிழீழ போராட்டத்தில் பெண்களும் ஆயுதம் ஏந்தும் நிலை உருவானது ஏன்?

## யோகி விளக்கம்

பருத்தித்துறை, ஏப் 21

எமது விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு முக்கியமானது. எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றி மகளிர் கைகளிலேயே உள்ளது

தென்புலோலி சாரையடி மகளிர் சிறுவர் நூலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய வடமராட்சிப் பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு. யோகி மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விழா சட்டத்தரணி செல்வி எஸ். இராமநாதன் தலைமையில் நடைபெற்றது.

இறந்த தமிழீழ விடுதலை இயக்கப் போராளியின் தாயாரான திருமதி பு. சேதுநாயகம் நூலகத்தை திறந்து வைத்தார்.

யோகி மேலும் பேசுகையில் கூறியதாவது:—

இன்று தமிழ்பேசும் பகுதிகளில் நான்கு பெண்களுக்கு ஒரு ஆண் என்ற விகிதத்தில் பெண்கள் உள்ளனர். இதனால் தான் விடுதலை போராட்டத்தில் பெண்களும் ஆயுதம் ஏந்த வேண்டியுள்ளது எமது வெற்றிக்கு பெண்களின் பங்கும் இன்றியமையாதது என்ற காரணத்தினாலும் பெண்கள் இன்றி வெற்றி பூரணமடையாது என்ற நோக்கினாலும் பெண்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கினோம்.

பெண் போராளிகள் ஆண்களுக்கு எவ்வகையிலும் சளைத்தவர்கள் அல்லர். அவர்களுக்கு பூரண பயிற்சியும் ஆயுதங்களைப் பாவிக்கும் திறன்களையும் வழங்கியுள்ளோம்.

பாரதி கண்ட புதுமைப் பெண் இன்று உருவாகிவிட்டாள். அவள் எல்லாத் துறைகளிலும் முன்னேறி விட்டாள்.

சிங்கள இனவாத அரசு மூக்கின் மீது கை வைத்துப் பார்க்குமளவுக்குப் பெண் போராளிகள் முன்னேறியுள்ளனர்.

ஆண்கள் விடுதலை இயக்கங்களில் சேருவதற்குத் தயங்கும்போது இன்று பெண்கள் திரள் திரளாக அணி அணியாகச் சேர வருகின்றனர்.

இன்று இராணுவ முகாம் காவலுக்குக்கூட பெண் போராளிகள் தயார். அவர்கள் சாவுக்கு பயப்படவில்லை.

அவர்களின் ஆர்வம், துடிப்பு, வெற்றி பெற வேண்டும் என்ற அவா ஏனைய மாணவர் மத்தியிலும் ஏற்பட வேண்டும். இப்போராட்டத்துக்கு அனைவரும் பங்களிக்க வேண்டும்.

ஆனால் சிலர் இப்போராட்டத்தை ... வரவேண்டும். என்றும் அவர்களால்தான் இன்றும் ... கின்றார்கள். இது தவறு. எமது இழந்த சுதந்திரத்தை விடுதலையை நாம் போராடித்தான் பெறவேண்டும் அப்போது தான் அதற்கு ஒரு கனதி ஏற்படும் பெருமதி உண்டு.

### டிச 19 யோசனை

டிசம்பர் 19 யோசனைகளைச் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டும். மலையகத் தமிழர்களை ஜி ஜி பொன்னம்பலம் புறக்கணித்தார். அவர்களை நிர்க்கதியாக்கி துரோகத்தனம் செய்தார்.

அதே போன்று தமிழர்களுக்கு எந்தத் துரோகத்தையும் எமது அமைப்புச் செய்யாது.

கிழக்கு மாகாணத்திலுள்ள 1048 சதுரமைல் பரப்பளவில் 600 சதுரமைல் பரப்பையும் அம்பாறையில் உள்ள 1752 சதுரமைல் பரப்பில் 900 சதுரமைல் பரப்பளவையும் நாம் இழக்கத் தயாராகவில்லை.

வயல்களையும் மற்றும் விவசாய நிலங்களையும் இழந்து வெறுமனேயுள்ள பகுதியை ஜே. ஆரிடமிருந்து பெறுவதற்கு நாம் தயாரில்லை.

இவை பாரம்பரியமான தமிழ்ப் பிரதேசங்கள் இவற்றில் சிங்கள அரசு திட்டமிட்டுக் குடியேற்றங்களை நடத்திவிட்டு இன்று தமது பிரதேசம் என்கிறார்கள். இதனை வரலாற்றின் ஆதாரமாகக் கொண்டு நோக்கவேண்டும்.

கடந்த 15 வருடகாலமாக தமிழீழப் போராட்டத்தில் காலடி வைத்த எமது இயக்கம் அரைகுறைத் தீர்வை ஏற்க மாட்டாது.

எமது இலட்சியம் தமிழீழம் தான் ... றார். ... தாரம், திருமதி சா. மாணிக்கவாசகர் ஆகி

### சமய சந்நிதிகளில்

## அனலையில் பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டை

அனலைதீவு, ஏப். 22

எமது இனத்தின் விடிவுக்காகவும் எம்மவரின் நலன் உயரவும் அனலைதீவிலுள்ள சக்கர நாதர் கணபதிப்பிள்ளையார் கோவிலில் பஞ்சமுக விநாயகர் எழுந்தருளி இருக்கிறார்

விநாயகருக்கு எதிர் வரும் வைகாசி மாதம் கும்பாபிஷேகம் நடைபெறும்

விநாயகரின் விக்கிரகத்தை கன்னுதிட்டியிலுள்ள ஆச்சாரியார் திரு. த. சின்னராசா

**பொய்யாமொழி**



**குறள்:**

காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்.

**பொருள்:**

தன் விருப்பம் பிறர்க்குத் தெரியாதபடி விருப்பமானவற்றை நுகர வல்லவனானால், பகைவர் தன்னை வஞ்சிப்பதற்காகச் செய்யும் சூழ்ச்சிகள் பலிக்காமல் போகும்.

## ★★★★★★ செய்திக்கொத்து ★★★★★★

### நொத்தாரிஸ் பரீட்சையில் சித்தி

கல்முனை, ஏப் 22

வீரமுனை இராமகிருஷ்ண சங்க முன்னாள் அதிபரும், தற்போழுது சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரி தமிழ் மொழிப் பாடத்திற்கான பகுதி நேர விரிவுரையாளருமான சைவப்புலவர், பண்டிதர் திரு. வி. ரி. செல்லத்துரை கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற நொத்தாரிஸ் இறுதிப் பரீட்சையில் சித்தி பெற்றார். இலங்கையில் இம்முறை சித்தியடைந்த இரண்டு தமிழர்களில் இவரும் ஒருவர் (இ-84)

### சாவற்காடு வந்த அகதிக் குடும்பங்கள்

காங்கேசன்துறை, ஏப். 22

காங்கேசன்துறையில் அசம்பாவிதங்கள் காரணமாக இடம்பெயர்ந்து மாவிட்டபுரம் சாவற்காடு என்னுமிடத்தில் அகதிகளாக தங்கியுள்ள மயிலிட்டி திருப்பூர் ஒன்றியத்தைச் சேர்ந்த 54 குடும்பங்களுக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் நிவாரண உதவிகளை வழங்கியுள்ளது (இ-68

### இலவச உணவு வழங்கக்கோரிக்கை

காங்கேசன்துறை, ஏப் 22

மயிலிட்டிப் பகுதியிலிருந்து வெளியேறி பல்வேறு இடங்களிலும் கஷ்ட நிலையில் வாழும் கடற் தொழிலாளர்களுக்கு இலவச உணவு விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டுமென தொழிற் சமூக அபிவிருத்தி அமைப்பு யாழ். அரசாங்க அதிபரைக் கோரியுள்ளது. (இ-68)

### மினிபஸ் நிலையம் இடம் மாற்றம்

காங்கேசன்துறைஏப் 22

காங்கேசன்துறை சந்தியில் இருந்து சேவையில் ஈடுபட்டு வந்த மினிபஸ்கள் தற்போது காங்கேசன்துறை குருவிச் சந்திக்கு அருகாமையில் இருந்தே சேவையை ஆரம்பிக்கின்றன. (இ-68)

### சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, ஏப். 22

களுதாவளை கிராம சேவை அலுவலகர் திரு. ஆர் சுந்தரலிங்கம் மர்மமான முறையில் சுட்டுக் கொலைப்பட்டுள்ளார். 36 வயதுடைய இவருக்கு ஒரு குழந்தை உண்டு (இ-81)

### பிரஜைகள் குழு கண்டனம்

மட்டக்களப்பு, ஏப். 22

யாழ். வைத்தியசாலை மீதான ஷெல் தாக்குதல் குறித்து மட்டக்களப்புப் பிரஜைகள் குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரொன்றில் எதிர்காலத்தில் இத்தகைய தாக்குதல்கள் இடம்பெறுதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. (இ-81)

### வாசகர் திருமுகம்

## கவனிப்பாரற்ற வீதியின் அவலநிலை

கோண்டாவில் — இருபாலை வீதியால் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை அநுபவிக்கிறார்கள்.

போக்குவரத்துப் பாவனைக்குரிய பிரதான வீதிகளில் ஒன்றான இப்பாதை பழுதடைந்து திருத்தப்படாமல் இருப்பதே இதற்குக் காரணம்.

இதனால் இவ் வீதியால் வாகனங்களிலும், கால் நடையாகவும் செல்பவர்கள் பெரும் கஷ்டங்களையும், சிரமங்களையும் அனுபவிக்கவேண்டியுள்ளது:

பஸ் போக்குவரத்துச் சேவைக்குரிய வீதியாக விளங்கிய இவ் வீதி இன்று கவனிப்பாரற்ற அவல நிலையில் இருப்பது இப் பகுதி மக்களின் கவலைக்குரிய விடயமாகும்.

இந்த அவல நிலையைப் போக்க சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுப்பார்களா?

எம். தே. இ...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

* வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று ரூ. 5/- மட்டுமே!
* ProcessingFree(நெகடிவ்செய்வது இலவசம்)
* வர்ண புகைப்பட சுருள்கள் விற்பனைக்கு
KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR

**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**

111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23628



# உதயன்

22 - 04 - 1987 புதன்கிழமை



அன்புடன் அழைக்கின்றது!

**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**

* தரமான வர்ண நிழற்படப் பிரதிகளை
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில்
* சிறந்த சேவையில்

பெற்றுக்கொள்ளலாம்.


# சிங்களப் பகுதிகளிலேயே சிங்களவருக்கு பாதுகாப்பில்லை

## சமீபத்திய சம்பவங்கள் குறித்து சிறிமாவோ அறிக்கை

கொழும்பு, ஏப் 22

இந்த அரசாங்கத்தினால் சிங்களப் பிரதேசத்திலேயே சிங்கள மக்களைக் காப்பாற்ற முடியாதுள்ளது.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

சந்தளாய்க்கு அருகில் நடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் குறித்து திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கருத்து வெளியிட்டார்.

யுத்த நிறுத்தம் அமுலில் இருந்த சமயம் வெளிவி நிகழ்ந்த படுகொலைச் சம்பவம் பெரும் அதிர்ச்சியைத் தந்தது.

இந்த சம்பவத்தினால் சர்வதேச சமூகமும் அதிர்ச்சியடைந்தது.

தீவிரவாதக் போலன் [illegible] மாவட்டத்துக் குள்ளும் நுழைந்து விட்டதை இச்சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.

தீர்வு காணுவதற்கு புதிய முயற்சிகள் எடுக்கப்படும் சமயத்தில் இப் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

யுத்த நிறுத்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் புறக்கணித்த பின்னரும் அரசு கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவில்லை. இதனால் அப்பாவிச் சிங்கள மக்கள் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இரையாக வேண்டியதாயிற்று.

நாட்டில் அமைதி, சமாதானம், மனித உரிமை பேணல் ஆகியவற்றை நிலைநாட்ட சர்வதேச சமூகம் உதவ வேண்டும்.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

(இ-எ)

## பள்ளேகல சம்பவத்தை அடுத்து

# மத்திய மாகாணத்தில் பாதுகாப்பு தீவிரம்!

கொழும்பு ஏப்ரல் 22

பள்ளேகல இராணுவ முகாம் கொள்ளையைத் தொடர்ந்து மத்திய மாகாணத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இது சம்பந்தமான உயர் மாநாடு ஒன்று பொலிஸ் மா அதிபர் சிறில் ஹேரத் தலைமையில் கண்டி பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் கூட்டப்பட்டது.

பள்ளேகல சம்பவத்தில் கொள்ளை போன ஆயுதங்களை மீட்கமுடியும் என்றும் கொள்ளைக் கோஷ்டித் தலைவரையும் கைது செய்யமுடியும் என்றும் மாநாட்டில் பொலிஸார் நம்பிக்கை தெரிவித்தனர்.

மத்திய மாகாணத்தில் முக்கிய வீதிகளில் தடைமுகாம்கள் போடப்பட்டு தேடுதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்றும் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

### கிராம---

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

விப் பகுதி கிராம சேவையாளர் திரு செ உலகநாதனின் வீட்டிலேயே தற்போது சிப்பாய்கள் நிலைகொண்டுள்ளனர்.

பலாலி முகாம் விஸ்தரிப்பால் இவரது வீடு இராணுவத்தால் திடீரென கைப்பற்றப்பட்டது. (இ-எ)

### பள்ளி எழுந்திடுவீர் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஏப் 22

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் வழங்கும் பள்ளி எழுந்திடுவீர் நாடகம் தவிர்க்க முடியாத காரணங்களால் மறு அறிவித்தல்வரை பிற்போடப் பட்டுள்ளது. (இ-எ)

### சடலங்கள் ---

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

டம் ஒன்றிலும் பற்றிக் கொண்டது அத்தமாடிக் கட்டடத்தின் கீழ் மாடியில் உள்ள கடைகளிலும் தீப்பிடித்துக்கொண்டது.

எத்தனை பேர் இறந்தார்கள் என்று சரியாகச் சொல்ல முடியாது. 35 சடலங்களை எண்ணக் கூடியதாக இருந்தது.

இந்த எண்ணிக்கையிலும் பார்க்க கூடுதலானோர் உயிரிழந்திருந்தனர் என்றும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

நூற்றுக்கும் குறையாதோர் உயிரிழந்திருக்கலாம்

- இப்படி திரு ரெற்றி தெரிவித்தார்.

## புறக்கோட்டையில் குண்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்தது.

இதனால் முதலில் வங்கிக் கட்டடம் தீப்பிடித்தது. அதையடுத்து அருகில் இருந்த சில கடைகளிலும் தீப்பிடித்துக் கொண்டது.

### வாகனங்கள் சேதம்

அப்பகுதியில் நின்ற வாகனங்கள் பல மோசமான முறையில் சிதறி நொருங்கியுள்ளன. பல வாகனங்கள் தீப்பிடித்து எரிந்து சேதமடைந்தன.

குண்டு வெடிப்பு நிகழ்ந்ததையடுத்து அப்பகுதியில் பெருமழை பெய்ததால் மீட்புப் பணிகளைத் துரிதமாகச் செய்ய முடியவில்லை.

### மீட்பு வேலைகள்

குண்டு வெடித்ததையடுத்து அப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் உடனடியாக வரவழைக்கப்பட்டனர்.

கட்டட இடிபாடுகளுக்கு மத்தியிலும் நாலாபக்கமும் சிதைந்த நிலையில் சிதறிக்கிடந்த சடலங்களுக்கு மத்தியிலும் இருந்து படுகாயமடைந்தோரை மீட்கும் பணியில் படையினரும், ஏனைய பொதுஸ்தாபன அமைப்புக்களும் ஈடுபட்டன.

பல அம்புலன்ஸ்கள் சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்து காயப்பட்டோரை நகரில் உள்ள பல ஆஸ்பத்திரிகளுக்குக் கொண்டு சென்றன.

### கொழும்பு அதிர்ந்தது

குண்டு வெடிப்பைத் தொடர்ந்து கொழும்பு நகரம் அதிர்ந்தது. பல மைல் தொலைவுக்கு இடி போன்ற சத்தம் கேட்டது. வீடுகள், கட்டடங்கள் நடுங்கின. குண்டு வெடிப்பைத் தொடர்ந்து நகர மக்கள் மத்தியில் பெரும் பதற்றமும் பீதியும் நிலவியது. இச்சம்பவத்தைத் தொடர்ந்து வீதிகள் வெறிச்சோடின.

முக்கிய சந்திகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டன.

### ஊரடங்கு அமுல்

குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்பு மாவட்டத்திலும் கம்பஹா மாவட்டத்திலும் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது.

நேற்று இரவு 8 மணி தொடக்கம் ஊரடங்குச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இன்று புதன்காலை 5 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இன்று காலை 9 மணி முதல் மீண்டும் ஊரடங்கு அமுலுக்கு வரும். வியாழக் கிழமை காலை 5 மணிவரை அது அமுலில் இருக்கும்.

### இன்று விடுமுறை

இன்று புதன்கிழமை அரசாங்க, வங்கி, வர்த்தக விடுமுறையாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இதே வேளை இச்சம்பவத்தையொட்டி, பதற்றமடையாது இருக்கும்படியும், அமைதியாக வீடுகளிலேயே தங்கி இருக்குமாறும் அரசாங்கம் கொழும்பு நகர மக்களைக் கேட்டிருக்கிறது.

### தமிழ்ப் போராளிகள் மீது குற்றச்சாட்டு

இச்சம்பவத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகளும், ஈரோஸ் இயக்கமுமே பொறுப்பு என்று அரசாங்கம் குற்றம் சாட்டியது.

இதே வேளை குண்டு வெடிப்புச் சம்பவத்தில் சிக்குண்டவர்களை மீட்கும் வேலைகளும், தீயை அணைக்கும் வேலைகளும் நேற்று இரவிரவாக நடந்தன. (அ-க-எ)

## வித்தாரம்

முரளியார்! வந்தாச்சு பேரன். என்ன நாட்டு நிலைமை வர வர மோசமாகிக்கொண்டு போகுது. வடக்கிலை கிழக்கிலை தெற்கிலை எண்டு வன்செயல்கள் வளர்ந்துகொண்டே போகுது ஏதோ எல்லாத்தையும் தமிழ்ப் போராளியள் தான் செய்யிறதாகச் சாட்டிக்கொண்டு, போராளியளை அழிப்பதாகச் சொல்லிக்கொண்டு காலத்தைக் கடத்துது.

உந்தச் சம்பவங்கள் இனப் பிரச்சினைபோலை மட்டும் சம்பந்தப்பட்டதாய் அரசாங்கம் காட்டிக்கொள்ளப் பார்க்குது. மக்கள் எல்லோரும் மடையர் எண்ட நினைப்புப் போல.

வடக்கிலை மட்டுமில்லை தெற்கிலையும் சனநாயகம் செத்துக்கொண்டிருக்கு. செத்துப் போச்சுது அதாலை தான் உவ்வளவு கஷ்டங்களும்.

வடக்கு, கிழக்கிலை இராணுவ அடக்குமுறை. அதாலை அந்தப் பகுதியிலை சனநாயகம் எண்டால் ஷெல்லா, குண்டா எண்டு கேட்கவேண்டிய நிலை. தெற்கிலை என்டாப் போலை நிலைமை சீராக இருக்கோ? இல்லைக் கேட்கிறன்!

சனசமூக நிலையம் நடத்திற பொதுக்கூட்டம் ஒண்டுக்கு நேற்றைக்கு அடிக்கிறது எண்டாலும் அந்தப் பகுதிப் பொலீஸ் இன்ஸ்பெக்டரின்ரை அனுமதி வேணும்.

பள்ளிக்கூடப் பெடியள் சேர்ந்து வெளியாலை ஒரு சந்திப்பு நடத்திறதையும் இரகசியப் பொலீஸ் நோட்டம் விடும்.

கூட்டம் நடக்கப் போகுது எண்டு அறிவித்தல் ஒட்டினாலும் பொலீஸ்காரர் கைது செய்யினம்.

தமிழ் இளைஞருக்கு எண்டு இயற்றின பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இப்ப தெற்கிலை அரசாங்கத்துக்கு எதிரான கொள்கையுள்ள மற்றப் பக்கத்தாரை சிறையிலை போட, சித்திரவதை செய்ய "புச் சுவிக்கில்" பாவிக்கப்படுகுது.

எனக்கு நல்ல ஞாபகம் ருக்கு நம்பு. சரத் முத்தெட்டுவேகம உதை அடிக்கடி பார்லிமெண்டிலை சொல்லி வந்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மாதிரி இன்னும் கொஞ்ச நாளிலை ராணுவ அடக்குமுறையும் தெற்கிலை வரும்.

அதுக்குப் பிறகு என்ன. நாடு முழுதிலும் ராணுவ ஆட்சி. பிறகு ராணுவத்துக்குள்ளை குத்துப்பாடு, பிடுங்குப்பாடு. பிறகு ராணுவச் சதி. அதுக்குப் பிறகு ராணுவ அரசாங்கம். அப்பிடி இப்பிடி எண்டு கதை தொடரும்.

இதுகள் எல்லாம் ஒரு ரசாயன வாய்ப்பாடுகள் மாதிரி, அதாவது தாக்கம் எதிர்த் தாக்கம் எண்டு நடந்துகொண்டே இருக்கும் இலங்கைக்கு மட்டும் புதிசாய் நடக்கிறதோ எண்டு நினையாதை. ஆயுத பலத்தை நம்பி ஆட்சி செய்ய வெளிக்கிடுற எல்லா நாடுகளிலையும், எல்லாத் தலைவர்களுக்கும் உது நடக்கிறது இயற்கை.

ஆனபடியால் இந்தக் கட்டத்திலையாவது அறிவுக்கு சமமோ? ஆயுதத்திலை வைச்சிருக்கிற நம்பிக்கையைக் கைவிட்டு கொஞ்சம் விட்டுக்குடுத்து தமிழர் பிரச்சினையையும் தீர்த்து, சனநாயகத்தையும் நிலைநிறுத்த முயற்சிக்கேணும். இல்லாட்டால் அவன் ஆட்டம் காண வேண்டியதுதான்.

முதலிலை உயர் ஆயுத இறக்குமதியிலை கமிஷன் வாங்கிறதுக்காக, இராணுவ நடவடிக்கைக்குத் தாம் போடுறவையைக் கண்டு பிடிச்சு அவையை தனக்குக் கிட்ட வைச்சிருக்காமல் தூக்கி வீச வேணும்.

பாக்கையிக்கையே ஆயுதக் கமிஷன் விவகாரம் இந்தியாவை எவ்வளவு உலுப்பு உலுப்பியிருக்கெண்டு. சுவீடனைச் சேர்ந்த "போவோர்(f)ர்ஸ்" கம்பனியிலை இருந்து ஆயுதம் வாங்கிறதுக்கு இந்தியச் ஒருவர் கமிஷன் வாங்கினார் எண்ட செய்தி பாலை அம்மை நாட்டே அதிருது. சிரேஷ்ட மந்திரி வி. பி. சிங் ராஜினாமாச் செய்யவைச்சிட்டுது அந்த விவகாரம். ஆனால் அவர் அது பற்றி விசாரணை வைக்க ஏற்பாடு செய்துவிட்டுத்தான் ராஜினாமாச் செய்திருக்கிறார்.

"போவோர்ஸ்" விவகாரம் மட்டுமே நீர்மூழ்கிக் கப்பல் கட்டும் ரெண்டரை எடுப்பதிலும் மேற்கு ஜெர்மன் கம்பனி ஒண்டு இந்தியக் கம்பனி ஒண்டுக்குப் "பகா" குடுத்ததாகச் சொல்லப்படும் விவகாரம்.

நமோ நமோ எண்டு "பெடர் பாக்ஸ்" விவகாரம்.

உதுகளைப் போலை எம்மடை நாட்டுக்கு வந்து சேருகிற ஆயுதங்களுக்கு எத்தனை பக்கங்களாலை கமிஷன்களும், பகாக்களும் போய்ச்சேருகிறதோ ஆருக்குத் தெரியும். கடவுளுக்குத் தான் வெளிச்சம்.

உந்த ஊழல் விவகாரங்களை பத்திரிகையள், வானொலியள் தான் வெளிச்சப்படுத்தினது.

ஆனால் இஞ்சை யாழ்ப்பாணத்திலை பொதுச் சேவையிலை ஈடுபடுகிற ஸ்தாபனங்களிலை பெரிய கதிரையளைப் பிடிச்சுக்கொண்டிருக்கிற பல பேருக்கு பத்திரிகைக்காரரைக் கண்டால் பெரிய அலர்ஜி! ஏதோ தங்கடை வீட்டு விஷயம் அதை மற்றவை அறியக்கூடாது எண்ட மாதிரி செய்தியாளரை வேண்டாம் எண்டு வெறுப்பாய் நடத்துகினம்.

ஒருகினை உதாரணம் குடா நாட்டின் மேற்குப் பக்கமாய் இருக்கிற ஒரு பொது ஸ்தாபனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்துக்கு பத்திரிகைச் செய்தியாளரை அனுமதிக்க பெரிய நிபந்தனை போடப்பட்டதாம்.

பத்திரிகைச் செய்தியாளர்கள் அந்த ஸ்தாபனத்துக்கு விண்ணப்பம் செய்து அனுமதி பெற்றுத் தான் பொதுக்கூட்ட நிகழ்ச்சிக்கு சமுகமளிக்க முடியும் எண்டது தான் அந்த நிபந்தனை. இது இராணுவ ஆட்சியை விட மோசமான தொல்லை!

கொழும்பிலை கொஞ்சம் பரவாயில்லை போலை. முக்கிய கூட்டங்களுக்கு அழைப்பிதழ் அனுப்பி பத்திரிகைச் செய்தியாளரை வரச் சொல்லுகினம்; இஞ்சை தலைகீழாய் இருக்கு!

ஐயோ யாழ்ப்பாணச் 'சனநாயகமே!! தமிழ் நாட்டிலை "ஆனந்த விகடன்", விவகாரம் மாதிரி இஞ்சையும் ஒண்டு வராதா?

கொண்டோடி

## தொலைபேசித் தடையால்

# யாழ் அரச அலுவல்கள் பெருமளவு பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்ரல் 22

கடந்தபல மாதங்களாக குடா நாட்டுத் தொலைபேசிச் சேவை தடைப்பட்டுள்ளதால் அரச செயலக, திணைக்கள வேலைகள் தாமதம் அடைந்துள்ளன.

அரச அலுவல்கள் காரணமாக உள்ளூருக்குள்ளேயோ அல்லது கொழும்புடனோ தொடர்புகொள்ள முடியாத நிலையில் அதிகாரிகள் இருந்துவருகின்றனர்.

இதனால் பல முக்கிய, அவசர வேலைகள் தாமதம் அடைந்துவருகின்றன.

அரசின் சில உத்தரவுகளைக்கூட இவர்களால் உடன் நிச்சயப்படுத்திக் கொள்ளமுடியாத நிலை இருந்து வருகிறது.

# மேலும் 1,500 குடும்பம் இலவச உணவு பெறும்

காங்கேசன்துறை, ஏப். 22

காங்கேசன்துறை மயிலிட்டிக் கரை, மயிலிட்டி வடக்கு கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து இடம் பெயர்ந்த மேலும் 1500 குடும்பங்களுக்கு இலவச உணவு விநியோகிக்க யாழ். அரச அதிபர் அங்கீகாரம் அளித்துள்ளார்.

இராணுவ நடமாட்டம் காரணமாக இந்த கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து மூவாயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்து வேறு இடங்களில் அகதிகளாக உள்ளன.

இதில் 1,500 குடும்பங்களுக்கு முதற் கட்டமாக இலவச உணவு விநியோகிக்கப்படுகிறது.

மேலும் 1,500 குடும்பங்களுக்கு இலவச உணவு விநியோகிக்க வேண்டுமென பல பொது ஸ்தாபனங்கள் கோரியிருந்தன.

இதற்கு யாழ் அரச அதிபர் அங்கீகாரம் அளித்ததை அடுத்து இவர்கள் பற்றிய பட்டியல் தயாரிக்கும் வேலை ஆரம்பமாகி உள்ளது. (உ-68)

## குருவீதிவரை வந்து திரும்பிய சிப்பாய்கள்

காங்கேசன்துறை முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் நேற்று குருவீதி வரை முன்னேறினர்.

போராளிகள் எதிர்த் தாக்குதலை ஆரம்பிக்கவே அவர்கள் மீண்டும் திரும்பி முகாமை அடைந்தனர்.

குரு வீதியில் வீடு ஒன்றில் தனியே இருந்த வலது குறைந்த நபர் ஒருவர் இராணுவத்தினரின் கண்ணில் பட்டுவிட்டார்.

எனினும் இராணுவத்தினர் அவருடன் அவ்வளவாக விட்டு எதுவும் செய்யாது சென்றனர். (இ-68)

## கிரிக்கெட் மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்ப்பாணம் ஜொனி பக்ஸ் விளையாட்டுக் கழக கிரிக்கெட் அணிக்கும் நெல்லியடி இருஸ் கொப்பர்ஸ் அணிக்கும் இடையிலான கிரிக்கெட் ஆட்டம் நாளை வியாழக்கிழமை நடைபெறும்.

இதேவேளை ஜொனி பக்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான கிரிக்கெட் ஆட்டம் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது.

இந்த இரண்டு ஆட்டங்களும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் அடிப்படையில் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (உ- )

# காயமடைந்த தாதி தேறி வருகிறார்

## இன்னும் மூளைக்குள் ஷெல் துண்டு

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி மீதான ஷெல் தாக்குதலின்போது படுகாயமடைந்த தாதி திருமதி பரஞ்சோதி தற்பொழுது ஓரளவு குணமடைந்து வருகிறார்.

எனினும் இவரது மூளைப் பகுதியில் ஷெல் சிதறல் துண்டு ஒன்று இன்னும் இருப்பதாக வைத்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மூளையில் ஏற்பட்ட தாக்குதலினால் உடலின் ஒரு பகுதியும் தற்பொழுது இயங்க முடியாத நிலையில் இருக்கிறது.

இவரது மூளையில் உள்ள ஷெல் துண்டை அகற்றும் சத்திரசிகிச்சையை மேற்கொள்வதற்காக இவ்வாரம் அளவில் விசேட விமானம் மூலம் இவர் கொழும்பு கொண்டு செல்லப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான ஏற்பாடுகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டுவருகிறது. (உ-10)

## மல்லிகை கவிதைகள் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப் 22

மல்லிகைப் பந்தல் அமைப்பின் நான்காவது வெளியீடான 'மல்லிகைக் கவிதைகள்' வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் நடைபெறும்.

கவிஞர் சோ. பத்மநாதன் தலைமை வகிப்பார்.

திரு. இ. ஜெயராஜ், ஈழத்துச் சிவானந்தன் ஆகியோர் அறிமுக உரை நிகழ்த்துவர். (இ-எ)

## இராணுவத்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பிடத்தக்கது

இந்த முகாமின் மீது அதனை அழித்தொழிக்கும் வகையிலான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஆர் பீ ஜீ 155 எம். எம் ரகச் சிறு பீரங்கிகள் மூலம் தொடர்ந்து நான்கு மணித்தியாலங்களாக மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலின் மூலம் இம் முகாமின் பிரதான காவலரண், தொடர்பு நிலையம், பிரதமசெயலகம் என்பன முற்றாகச் சேதமாக்கப்பட்டன.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது (உ)

# தோட்டங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்ட பணம் கொள்ளை

## துப்பாக்கிகளும் அபகரிப்பு

கொழும்பு ஏப்ரல் 22

ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்று பலாங்கொடையில் இரண்டு தோட்டங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்ட சம்பளப் பணத்தைக் கொள்ளை அடித்துச் சென்றது.

இச்சம்பவம் வார இறுதியில் இடம் பெற்றது.

ஜீப் ஒன்றில் மூன்று தோட்ட ஊழியர்கள் சம்பளப் பணத்துடன் வந்தபோது, வழிமறிக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டது.

கொள்ளையிட்டவர்கள் ஜீப்பில் ஏறி மறைந்துவிட்டனர்.

ஜீப் பின்னர் பேரகல சந்தியில் அனாதரவாகக் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

ஜீப்பில் இருந்த இரண்டு துப்பாக்கிகளும் கொள்ளையிடப்பட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## ராஜகுருவும் சாட்சியாக அழைக்கப்படுவார்

கொழும்பு ஏப், 22

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வண பிதா ஆபரணம் சிங்கராயருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் யாழ் மாவட்டத்தின் பொலிஸ் அதிபராகக் கடமையாற்றிய திரு ராஜகுருவும் சாட்சியமளிக்கவிருக்கிறார்.

திரு. ராஜகுரு தற்சமயம் பிரதி பொலிஸ் மா அதிபராகக் கடமை யாற்றுகிறார்.

இவ்வழக்கு கடந்த திங்கட்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு ரி. சுந்தரலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

அப்போதே இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

மேல் விசாரணை நாளை வியாழன் வரை ஒத்திவைக்கப்பட்டது. (க-எ)

## ஹெலி நோட்டம்

கொக்குவில், ஏப். 22

கொக்குவில் ரயில் நிலையப் பகுதியை நேற்று மாலை 5 மணியளவில் ஹெலி ஒன்று வட்டமிட்டு நோட்டமிட்டது. (இ-69)

## மரம் ஏறியவர் கீழே விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 22

தென்னை மரத்தில் ஓலை வெட்ட ஏறியவர் தவறி விழுந்து மரணமானார்.

அச்சுவேலியைச் சேர்ந்த க. கந்தசாமி (வயது 40) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

நேற்று முன்தினம் இச் சம்பவம் நடைபெற்றது.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் அவர்களால் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி 22 - 04 - 1987 தொலைபேசி இல. 24805, 22078

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office Under Number QJ / 94 / N/87 Telephone, 24805, 22078



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org